குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.
முன்னிலை : செல்வி.S.ஆக்னஸ் ஜெப கிருபா, எம்.எல்.,
**குற்றவியல் நீதித்துறை நடுவர், திருவையாறு**

**2026-ம் வருடம் ஏப்ரல் மாதம், 30-ம் நாள், வியாழக்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.61/2020**
CNR NO: TNTJ16000130-2020

அரசுக்காக காவல் ஆய்வாளர்,
நடுக்காவேரி காவல் நிலையம்,
குற்ற எண். 160/2018 .... குற்றமுறையிடுபவர்

/ எதிர் /

நாகராஜன், வயது 47/2026
த/பெ. பழனிமுத்து,
1/7, தெற்குத் தெரு, அண்ணா நகர்,
வெங்கடாஜலபுரம், .....எதிரி
லால்குடி தாலுக்கா,
திருச்சி.

<table>
<tr><td colspan="6">மாண்புமிகுசென்னைஉயர்நீதிமன்ற07.04.2021 நாளிட்டR.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படிCASE SUMMARY கீழ்கண்டவாறுவிவரிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>S.No.</td><td colspan="5">CASE SUMMARY</td></tr>
<tr><td rowspan="2">(i)</td><td rowspan="2">The Period of remand of the accused</td><td rowspan="2">:</td><td>Name of the Accused</td><td>Date of Remand</td><td>Released on</td></tr>
<tr><td>Nagarajan</td><td colspan="2">30.08.2018 by the Judicial Magistrate, Thiruvaiyaru while producing the accused for remand.</td></tr>
<tr><td rowspan="2">(ii)</td><td rowspan="2">The date of filing of the complaint/ final report in the Court</td><td rowspan="2">:</td><td>Filing of Complaint</td><td colspan="2">Filing of Final Report</td></tr>
<tr><td>30.08.2018</td><td colspan="2">05.12.2020</td></tr>
<tr><td>(iii)</td><td>The date of committal of the case to the Court of</td><td>:</td><td colspan="3">-</td></tr>
</table>

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:51:02 +0530

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Session** | | | | | |
| (iv) | **The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe** | : | 26.02.2021 | | | |
| (v) | **Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code** | : | **Crl.M.P.No.** | | **Date of Filing** | **Result** |
| | | | Crl.M.P.No.837/2026 U/s. 311 Cr.PC | | 07.04.2023 | Allowed |
| (vi) | **Date of examination in-chief and cross-examination of a witness** | : | **Name of the Examination** | | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW1 | Pushpa Johncy Rani | 10.08.2021 | 10.08.2021 |
| | | | PW2 | Ramesh | 29.03.2022 | - |
| | | | PW3 | Varunan | 29.03.2022 | 13.07.2022 |
| | | | PW4 | Alexander | 29.03.2022 | 13.07.2022 |
| | | | PW5 | Viswanathan | 20.06.2022 | 20.06.2022 |
| | | | PW6 | Vijay | 02.03.2023 | 02.03.2023 |
| | | | PW7 | Mahalingam | 19.04.2023 | 19.04.2023 |
| | | | PW8 | Mohamed Nivas (IO) | 07.04.2026 | 07.04.2026 |
| (vii) | **Date of examination of the accused U/Sec 313 of the Code** | : | 05.04.2026 | | | |
| (viii) | **Details of abscondence of an accused and his appearance/ production, as the case may be; and** | : | - | | | |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:51:08 +0530

| (ix) | Grant of stay by superior Courts and the results thereof | : | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | Result |
|---|---|---|---|---|---|
| | | | NIL | | |

| | | |
|---|---|---|
| 1–வதுகுற்றச்சாட்டு | : | எதிரி, தடம் எண். 5-A TN-01, N-4019 என்ற அரசு பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து புகார்தாரரின் கணவர் மற்றும் இளையராஜா வந்த இரு சக்கர வாகனத்தில் மோதி, புகார்தாரரின் கணவர் மற்றும் இளையராஜாவிற்கு இறப்பை ஏற்படுத்திய செயலுக்காக இதச.பிரிவு.304(A)(2 எண்ணிக்கை)–ன் கீழ் |
| எதிரியின் பதில் | : | பொய்வழக்கு. |
| நீதிபதியின்தீர்மானம் | : | குற்றவாளி இல்லை என முடிவு. |
| உத்தரவு(அ) தண்டனை | : | 1.எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு 304(A)(2 எண்ணிக்கை)–ன் கீழான குற்றச்சாட்டு அரசுதரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு.255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.<br>2. இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாகிவிடும் என உத்தரவிடப்படுகிறது.<br>3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை. |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:51:12 +0530

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 05.12.2020–ஆம் தேதி ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 61/2020–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதங்களை கேட்டும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து **30.04.2026–ஆம்** தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது, அரசு தரப்பில் இரண்டாம் நிலை அரசு உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.**K. பன்னீர் செல்வம், B.Com., B.L.,** அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வ வாதுரை பரிசீலிக்கப்பட்டும், எதிரி தரப்பில் எடுத்துரைத்த வாதுரை கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், என் ஆய்வில் வைத்தும், இந்நீதிமன்றம் வழங்கிடும்

<u>**தீர்ப்புரை**</u>

எதிரிக்கு எதிராக இ.த.ச.பிரிவு 304(A)(2 எண்ணிக்கை)–ன் கீழ் நடுக்காவேரி காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**1. கு.வி.மு.ச.பிரிவு.173–ன் கீழ் தாக்கலான குற்ற இறுதி அறிக்கையின் படி வழக்கின் சுருக்கம்:–**</u>

கடந்த 29.08.2018–ஆம் தேதி , புகார்தாரரின் கணவர் ஓட்ட, இளையராஜா பின்னால் அமர்ந்து TN 51 M 2881 TVS Stor sports இருசக்கர வாகனத்தில் 20.00 மணிக்கு மணக்கரம்பை புது ரவுண்டானா தாண்டி, டாட்டா மோட்டார்ஸ் எதிர்புறம் இடதுபுற ஓரமாக சென்றபோது, திருவையாறில் இருந்து தஞ்சாவூர் நோக்கி வந்த தடம் எண். 5-A TN-01, N-4019 என்ற அரசு பேருந்தின் ஓட்டுநரான எதிரி, மேற்படி பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து, புகார்தாரரின் கணவர் மற்றும் இளையராஜா சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி, அவர்களுக்கு இறப்பை ஏற்படுத்தி இதச பிரிவு 304(A) 2

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:51:16 +0530

எண்ணிக்கையிலான குற்றம் இழைத்துள்ளதாக நடுக்காவேரி காவல் ஆய்வாளர் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு.204–ன் கீழ் அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், கு.வி.மு.ச.பிரிவு.207–ன் கீழ் வழக்காவணங்கள் இலவசமாக வழங்கப்பட்டன. பின்னர் ஆவணங்களை பரிசீலித்தும், இருதரப்பின் வாதங்களை கேட்டும், எதிரி மீது இ.த.ச.பிரிவு 304(A) 304(A) 2 எண்ணிக்கையின் கீழ் குற்றச்சாட்டின் சுருக்கம் வனைந்து எதிரிக்கு எடுத்து கூறி விளக்கி வினவியபோது, எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3.** அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அரசுதரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.8** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**4. அரசுத்தரப்பு சாட்சியங்களின் படி வழக்கின் சுருக்கம்:–**

புகார்தாரர் மணக்கரம்பையில் வசித்து வருகிறார். 29.08.2018–ஆம் தேதி டீ குடிப்பதற்காக புகார்தாரரின் கணவரும், இளையராஜாவும் டிவிஎஸ் ஸ்டார் ஸ்போர்ட்ஸ் இருசக்கர வாகனத்தில் சென்று டீ குடித்துவிட்டு எம்ஆர்எப் மில்லருகே புது ரவுண்டானா இடத்தில் டாடா மோட்டார்ஸ் எதிர்புறம் வந்தபோது, வழித்தடம் 5A, TN 1 N 4019 என்ற எண்ணைக் கொண்ட அரசு பேருந்து, அதிவேகமாகவும், ஹாரன் அடிக்காமலும் வந்து, அவர்கள் இருவரும் வந்த இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக, புகார்தாரருக்கு போன் மூலம் தகவல் கிடைத்ததன்பேரில், சம்பவ இடம் சென்று, அவர்கள் இருவரும் இறந்ததை பார்த்து காவல் நிலையம் சென்று புகார்–அ.சா.ஆ.1 கொடுத்துள்ளார்.

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:51:21 +0530

புகார்தாரர் கொடுத்த அ.சா.ஆ.1- புகாரை பெற்ற அ.சா.7, குற்ற எண் 160/18 304(A)-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை-அ.சா.ஆ.4 பதிவு செய்து உள்ளார்.

வழக்குக் கோப்பை பெற்ற புலன் விசாரணை அதிகாரி ஜெகதீசன், தனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, சம்பவ இடம் சென்று, பார்வை மகஜர்-அ.சா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம்-அ.சா.ஆ.5 தயார் செய்து, சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து, திருவையாறு அரசு மருத்துவமனையில் வைத்து, இறந்த நபர்களின் பிரேதங்களின் மீது, பிரேத விசாரணை செய்து, பிரேத விசாரணை அறிக்கைகள்-அ.சா.ஆ.6, 7 தயார் செய்து, பிணக்கூராய்வு செய்வதற்கு மருத்துவமனைக்கு வேண்டுகோள் கடிதம் அனுப்பி, விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பியுள்ளார். மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வு அறிக்கைகள்-அ.சா.ஆ.8 மற்றும் அ.சா.ஆ.9 பெற்றுள்ளார். எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி, பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து, பிரேத பரிசோதனை அறிக்கைகள் அ.சா.ஆ.10, 11 பெற்று வழக்கின் புலன் விசாரணை முடித்து 02.08.2019 அன்று எதிரிக்கு எதிராக குற்றம் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**5.** அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக உள்ள சாட்சியங்கள் குறித்து, **கு.வி.மு.ச. பிரிவு. 313(1)(ஆ)-ன்** கீழ் எதிரியிடம் வினவியபோது, எதிரி அவற்றை பொய்சாட்சி என்றும், பொய்வழக்கு என்றும் பதில் கூறினார். எதிரியின் பதில் பதிவு செய்யப்பட்டது. எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார். எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:51:25 +0530

**6. இருதரப்பு வாதங்களின் சுருக்கம்:–**

அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வமான வாதுரையில், எதிரி அரசு பேருந்தை அதிவேகமாக ஓட்டிச் சென்று எதிரே இருசக்கர வாகனத்தில் வந்த புகார்தாரரின் கணவர் மற்றும் இளையராஜா மீது மோதி விபத்து ஏற்படுத்தி அவர்கள் இருவருக்கும் இறப்பை ஏற்படுத்தி இத.ச பிரிவு 304(A)–ன்கீழ் குற்றம் இழைத்துள்ளதாக தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில், அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரியின் குற்ற செய்கை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரி தரப்பில் மேற்கோள்காட்டடப்பட்ட சந்தேகங்கள் வழக்கினை பாதிக்கவில்லை என்றும், எதிரிக்கு அதிகபட்ச தண்டனை வழங்குமாறு சொல்லப்பட்டுள்ளது

எதிரிக்கும், வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றும், எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து நடந்தது என்பது நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், பொதுமக்கள் யாரும் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை என்றும், எதிரி எந்த சாட்சிகளாலும் அடையாளம் காண்பிக்கப்படவில்லை என்றும், எதிரி சம்பவத்தின்போது, விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டி வந்தார் என்பதை நிரூபணம் செய்வது அவசியம் என்றும், ஆனால், எதிரி விபத்து நடந்த சமயத்தில் பணியில் இருந்தார் என்பது தொடர்பான எந்த ஆவணமும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்றும், விபத்துக்குள்ளான இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் யார் என்பது தெரிவிக்கப்படவில்லை என்றும், முதல் தகவல் அறிக்கை காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்கான காரணம் சொல்லப்படவில்லை என்றும், பேருந்து நடத்துனர் மற்றும் பேருந்தில் பயணம் செய்தவர்கள் விசாரணை செய்யப்படாதது வழக்கினை பாதிக்கிறது என்றும், விபத்து எந்த வகையில் நடந்தது என்பது நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், மேற்கண்ட அனைத்தும் வழக்கினை பாதிக்கிறது என்றும், சந்தேகங்களின் பலனை

எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு எதிரி தரப்பில் வாதம் செய்யப்பட்டது.

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியபிரச்சனையாதெனில்,**

(i) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு.304(A)2 எண்ணிக்கையின் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா?

(ii) எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?என்பதேயாகும்.

**8. தீர்வு:–**

கடந்த 29.08.2018–ஆம் தேதி இரவு 8 மணியளவில், இருசக்கர வாகனத்தில் சென்ற புகார்தாரர் மற்றும் சாட்சி இளையராஜாவின் மீது, எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் பேருந்தை இயக்கி, மோதி, அவர்களுக்கு இறப்பை ஏற்படுத்தி இதச பிரிவு 304(A)–2 எண்ணிக்கையின் கீழ் குற்றம் இழைத்துள்ளதாக அரசு தரப்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 29.08.2018–ஆம் தேதி 20.00 மணியளவில் விபத்து நடந்ததாக சொல்லப்பட்டு, 30.08.2018 அன்று 00.10 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, அன்றையதினமே காலை 10.40 மணிக்கு முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கின் புலன் விசாரணை 02.08.2019–ஆம் தேதி முடிவுற்று, குற்ற இறுதி அறிக்கை 05.12.2020–ஆம் தேதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புகார்தாரர் கொடுத்த புகார்–அ.சாஆ.1–ல் 29.08.2018–ஆம் தேதி, புகார்தாரரின் கணவர் இளையராஜா என்பவருடன் இருசக்கர வாகனத்தில் சென்றபோது, தெற்கிலிருந்து வடக்கு நோக்கி மணக்கரம்பை புது ரவுண்டானா தாண்டி டாட்டா மோட்டார்ஸ் எதிர்புறம் இடதுபுற ஓரமாக வந்தபோது

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:51:34 +0530

திருவையாறில் இருந்து தஞ்சாவூர் நோக்கி எதிர்ப்புறம் வந்த, தடம் எண் 5A அரசு பேருந்து அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், அதன் ஓட்டுனரால் ஓட்டி வரப்பட்டு, புகார்தாரர் மற்றும் இளையராஜா சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி, அவர்கள் இருவரும் இறந்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை–அ.சா.ஆ.4–ஆனது அரசு பேருந்து தடம் எண் 5A, TN 01 N 4019 என்ற பேருந்தின் ஓட்டுநர் என்று குறிப்பிடப்பட்டும், எதிரியின் பெயர் குறிப்பிடாமலும் பதிவு செய்யப்பட்டுள்ளது .

இவ்வழக்கில், புகார் கொடுத்துள்ள புகார்தாரரும், இறந்து போன ஸ்டாலின் என்பவரின் மனைவியுமான புஷ்பா ஜான்சி ராணி அ.சா.1–ஆகவும், கண்ணுற்ற சாட்சிகள் அ.சா.2 மற்றும் 3–ஆகவும், கேள்விப்பட்ட சாட்சியாக அ.சா.4–ம், பார்வை மகஜர் சாட்சியாக அ.சா.5 மற்றும் 6–ம், புலன் விசாரணை அதிகாரிகளாக அ.சா.7 மற்றும் 8–ம் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். ஏனைய பட்டியல் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்ட சாட்சிகளுள் புகார்தாரர் அ.சா.1, தனது சாட்சியத்தில், தனது கணவர், இளையராஜா என்பவருடன் இருசக்கர வாகனத்தில் எம் ஆர் எம் மில் அருகில் புது ரவுண்டானா என்ற இடத்தில் சென்றபோது, வழித்தடம் 5 எண் கொண்ட அரசு பேருந்து வந்து மோதி, விபத்து ஏற்பட்டதாக தகவல் தெரிந்து, சம்பவ இடம் சென்று புகார்தாரரின் கணவரும் இளையராஜாவும் இறந்ததை பார்த்து புகார்– அ.சா.ஆ.1 கொடுத்ததாக சாட்சிளமளித்துள்ளார். மேற்கண்ட சாட்சியத்தின் மூலம் எதிரியை நேரடியாக பார்க்கவில்லை என்பது தெரியவருகிறது. எதிரி குறித்த எந்த சங்கதியும் புகார்தாரரால் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

5 A வழித்தடம், TN 01 N 4019 என்ற அரசு பேருந்து தஞ்சாவூருக்கு வந்து கொண்டிருந்ததாகவும் எதிரே ஸ்டாலின் மற்றும் இளையராஜா வந்த இருசக்கர வாகனத்தில் அரசு பேருந்து மோதியதாகவும். கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2 சாட்சிமளித்திருந்தாலும். ஓட்டுநரை தான்

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:51:38 +0530

பார்க்கவில்லை என்று அ.சா.2 சாட்சியமளித்துள்ளார். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3, அ.சா.2–ன் சாட்சியத்தை ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.3, பேருந்து முன்னே சென்ற லாரியை முந்தி செல்ல முயன்று வந்தபோது, விபத்து ஏற்பட்டதாக சாட்சியமளித்துள்ளார். ஆனால், எதிரி தான் மேற்படி வாகனத்தை ஓட்டினார் என்று எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.4, விபத்து குறித்து தங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்று சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5, 6 சம்பவ இடத்தில் போலீசார் வந்து வரைபடம் வரைந்து கையொப்பம் பெற்றார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளனர் .

புலன் விசாரணை அதிகாரிகள் அசா.7 மற்றும் 8சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதி அறிக்கையை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளனர். இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1 முதல் 6 வரையிலான சாட்சிகளுள் எந்த சாட்சிகளும் எதிரியை அடையாளம் காண்பிக்கவில்லை. 5 A வழித்தடம், TN 01 N 4019 என்ற எண் கொண்ட அரசு பேருந்தை ஓட்டி வந்த நபர் விபத்து ஏற்படுத்தியதாக அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் மூலம் தெரியவந்தாலும், மேற்படி பேருந்தை எதிரி தான் ஓட்டினார் என்று எந்த சாட்சிகளும் சாட்சியம் அளிக்கவில்லை. சம்பவ சமயத்தில் எதிரி அந்த பேருந்தில் ஓட்டுநராக இருந்தார் என்பதற்கான எவ்வித சாட்சிகளும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப் படவில்லை. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துப்பூர்வ வாதுரையில் எதிரியை புலன் விசாரணை அதிகாரி கைது செய்ததன் மூலம் வழக்கு சம்பவத்தில் எதிரி ஈடுபட்டார் என்பது நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்ற வாதம் ஏற்கக்கூடியதாக இல்லை. புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில், எதிரி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் எந்தக் கிளையில் பணியில் இருந்தார் என்பதை அறிய அதன் மேலாளரை விாசரணை

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:51:42 +0530

செய்யவில்லை என்று கேட்கப்பட்ட கேள்விக்கு கிருஷ்ணமூர்த்தி என்பவரை விசாரணை செய்யததாக சொல்லப்பட்டுள்ளது. மேற்படி கிருஷ்ணமூர்த்தி என்பவர் இவ்வழக்கில் நீதிமன்றத்தில் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை.

சம்பவ இடம் மோட்டார் வாகன ஆய்வாளரால் ஆய்வு செய்யப்படவில்லை. அ.சா.ஆ.1–புகாரில் புகார்தாரரின் கணவரும், இளையராஜாவும் இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ரோட்டில் இடதுபுறம் சென்றபோது, எதிர் திசையில் வந்த பேருந்து மோதியதாக சொல்லப்பட்டுள்ளது. சம்பவத்தை பார்வையிட்டு தயார் செய்ததாக புலன் விசாரணை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5–ல், சம்பவ இடமாக கிழ மேல் தார் சாலையின் இடது புற ஓரம் சொல்லப்பட்டுள்ளது. "தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றபோது" என புகாரில் சொல்லப்பட்ட நிலையில் சாலை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி இருப்பதுபோல் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் மூலம், இவ்வழக்கானது உரிய முறையில் புலன் விசாரணை செய்யப்படவில்லை என்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

சம்பவ இடத்தில் விபத்துக்குள்ளானவர்கள் எந்த நிலையில் இருந்தார்கள் என்பது தொடர்பாக எவ்வித குறிப்பும் மாதிரி வரைபடத்தில் இல்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கைகள்–அ.சா.ஆ.8 மற்றும் 9–ன் மூலம், இருசக்கர வாகனத்தின் முன்புறத்திலும், பேருந்தின் வலது புறத்திலும் சேதம் இருப்பதாக அறியமுடிகிறது. மாதிரி வரைபடத்தில் சொல்லப்பட்டுள்ள சம்பவ இடத்தின் அமைப்பை வைத்தும், புகாரின் சங்கதியை வைத்தும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சேதங்களை வைத்தும், விபத்து எவ்வாறு நடைபெற்றது என்பதை அறிய முடியவில்லை. அது குறித்த போதுமான சாட்சியங்களும் முன்னிலைப்படுத்தப்படாததால், விபத்து எவ்வாறு நடைபெற்றது என்பதை நிரூபிக்க வேண்டிய அரசு தரப்பு, அதை

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:51:47 +0530

நிரூபிக்கவில்லை என்றும், அது வழக்கினை பாதிக்கிறது என்றும் எதிரி தரப்பில் செய்யப்பட்ட வாதம் ஏற்கக்கூடியதாக உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

புகார்தாரரின் கணவர் மற்றும் இளையராஜா சென்ற இருசக்கர வாகனத்திற்கு RC புத்தகம் இல்லை என மோட்டார் வாகன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர் யார் என புலன் விசாரணை அதிகாரி விசாரணை செய்யவில்லை என்றும், யாரோ ஒருவருடைய வாகனத்தை எடுத்து வந்து வேகமாக ஓட்டி சென்று அவர்களே விபத்துக்குள்ளானார்கள் என்று செய்யப்பட்ட எதிரி தரப்பு வாதமும் நீதிமன்றத்தால் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அதுவும் வழக்கினை பாதிப்பதாக கருதப்படுகிறது.

சம்பவ இடத்தில் வாகனங்கள் எந்த நிலையில் எவ்வாறு கிடந்தது என்பது குறித்து எந்த சங்கதிகளும் அறிக்கையிலும், மாதிரி வரைபடத்திலும் குறிப்பிடப்படவில்லை. வாகனங்கள் எங்கிருந்து கைப்பற்றப்பட்டன என்பது தொடர்பாகவும் எவ்வித சங்கதிகளும் வழக்கு கோப்பில் சொல்லப்படவில்லை. பேருந்து 30.08.2018—ஆம் தேதியும், இரு சக்கர வாகனம் 03.10.2018—ஆம் தேதியும் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுளளது இந்நீதிமன்றத்தால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. விபத்தில் இறந்துபோன ஸ்டாலின் மற்றும் இளையராஜாவின் பிரேத விசாரணை அறிக்கைகள், பிரேத பரிசோதனை அறிக்கைகள் ஆகியவற்றின் மூலமும், சாட்சிகளின் சாட்சியத்தின் மூலமும் அவர்கள் விபத்தில் இறந்துள்ளனர் என்பது தெரியவருகிறது. ஆனால், மேற்படி விபத்து எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் மட்டுமே நடந்தது என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிருபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் தான் விபத்து நடந்தது என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம்

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:51:52 +0530

கருதி, மேற்கண்ட சந்தேகங்களின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி இ.த.ச.பிரிவு 304(A) 2 எண்ணிக்கையின் கீழ் எதிரி குற்றவாளி அல்ல என்று கு.வி.மு.ச.பிரிவு.255(1)–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரி விடுதலை செய்யப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

9. முடிவாக,

**1. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு 304(A)2 எண்ணிக்கையின் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எதிரி குற்றவாளி அல்ல என்று, எதிரியை கு.வி.மு.ச. பிரிவு. 255(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.**

**2. இவ்வழக்கில் எதிரி தரப்பில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரங்கள் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.**

**3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படாததால் அவற்றை பொறுத்து உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய அவசியம் எழவில்லை.**

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026–**ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30–ஆம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:51:57 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவையாறு.

**அரசுத்தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா1 | புஷ்பா ஜான்சி ராணி (புகார்தாரர்) |
| அ.சா.2 | ரமேஷ் |
| அ.சா.3 | வருணன் |
| அ.சா.4 | அலெக்சாண்டர் |
| அ.சா.5 | விஸ்வநாதன் |
| அ.சா.6 | விஜய் |
| அ.சா.7 | மகாலிங்கம் |
| அ.சா.8 | முகமது நிவாஷ் (உதவி ஆய்வாளர்) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 30.08.2018 | புகார் மனு – அசல் |
| அ.சா.ஆ.2 | 30.08.2018 | பார்வை மகசரிலுள்ள அ.சா.5ன் 1–வது சாட்சி கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 30.08.2018 | பார்வை மகசர் அசல் |
| அ.சா.ஆ.4 | 30.08.2018 | முதல் தகவல் அறிக்கை அசல் |
| அ.சா.ஆ.5 | 30.08.2018 | மாதிரி வரைபடம் அசல் |
| அ.சா.ஆ.6 | 31.08.2018 | இளையராஜா பிரேத விசாரணை அறிக்கை அசல் |
| அ.சா.ஆ.7 | 30.08.2018 | ஸ்டாலின் பிரேத விசாரணை அறிக்கை அசல் |
| அ.சா.ஆ.8 | 03.10.2018 | TN51 M 2881 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசல் |
| அ.சா.ஆ9 | 30.08.2018 | TN01N 40189 இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அசல் |
| அ.சா.ஆ10 | 30.08.2018 | இளையராஜா பிரேத பரிசோதனை அறிக்கை அசல் |

AGNES JEBA KIRUBA S

Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:52:01 +0530

Date: 30.04.2026 JM Court, Thiruvaiyaru.

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ11 | 30.08.2018 | ஸ்டாலின் பிரேத பரிசோதனை அறிக்கை அசல் |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–**இல்லை.

**சான்றுப் பொருட்கள்:–**இல்லை.

**குறிப்பு:–**

1. எந்த சாட்சியமும் மூன்று முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கில் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

AGNES JEBA KIRUBA S
Digitally signed by AGNES JEBA KIRUBA S
Date: 2026.04.30 20:52:05 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
திருவையாறு